**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 508 **நாள்:** 24.09.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இன்று (21.09.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட சூரப்பட்டு சாலை மற்றும் புழல், காந்தி சாலையில் பள்ளி மாணவர்களின் காலை உணவுத் திட்டத்திற்கான மைய சமையல் கூடம், புழல் ஏரி மற்றும் உபரி நீர் வெளியேறும் பகுதி, கே.எஸ். நகர் 13ஆவது தெருவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட அண்ணாநகர் 2ஆவது மற்றும் 5ஆவது சாலை சந்திப்பு பகுதி, 1ஆவது மற்றும் 3ஆவது அவென்யூ சாலையின் குறுக்கே நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, செனாய் நகர் பகுதியில் மழைநீர் வடிகாலில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, அப்பகுதியில் டெங்கு பாதிப்பு கண்டறியப்பட்ட வீடு, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட பாடி, சரவணா ஸ்டோர் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மற்றும் வண்டல்கள் தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி, தண்டீஸ்வரம் நகர் பகுதியில் தூய்மைப் பணிகள், மழைநீர் தேங்குவது குறித்தும், சைதாப்பேட்டை, ஸ்ரீநகர் காலனியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திடவும், அன்றாட தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி அலுவலர்கள், களப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**